Registered as a News Paper பக்கங்கள்: 6 விலை ரூபா: 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM PeoplesDaily மக்கள் தினசரி

நாதம்: 02 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 25 (08-02-1992) சனிக்கிழமை ஓசை: 355

## மீண்டும் சார்க் மாநாடு பிரேமதாசா பரிந்துரை

சார்க் அமைப்பின் தற்போதய தலைவராக இருந்து வரும் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா மீண்டும் ஒரு சார்க் மாநாடு நடத்தப்பட வேண்டும் என்று பரிந்துரை செய்துள்ளார்.

எந்தத் திகதியில் எதுபற்றி இந்த உச்சிமாநாட்டில் ஆலோசிக்கப்படுமென எதுவும் தெரிவிக்கப்படவில்லை. இதேவேளை கடந்த வருடம் டிசம்பர் மாதத்தில் நடைபெற்ற சார்க் மாநாட்டில் அடுத்த உச்சிமாநாடு 1992 இல் [6 ஆம் பக்கம் பார்க்க]

# கரடியனாற்றில் உக்கிர சண்டை

# 7 இராணுவம் பலி: பலர் காயம்

## போர் விமானங்கள் அகோர குண்டு வீச்சு

(கொழும்பு)

மட்டக்களப்பு - கரடியனாற்றுப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும இடையில் உக்கிர மோதல்கள் இடம் பெற்று வருகின்றன. இம் மோதல்களில் குறைந்தது ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகவும் பலர் படுகாயம் அடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

கரடியனாற்றுப் பகுதியில் உலங்கு வானூர்தியின் உதவியுடன் இராணுவம் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டபோதே இந்த உக்கிர மோதல் மூண்டதாகச் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

விடுதலைப் புலிகளுக்கும், இராணுவத்திற்கும் இடையில் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாகவும், ஏழு இராணுவத்தினர் கொல்லப்பட்டிருப்பது மாத்திரமே உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் இராணுவ வட்டாரங்களை மேற்கோள் காட்டி ஏஜென்சி செய்திகள் மேலும் தெரிவித்தன.

[6 ஆம் பக்கம் பார்க்க]

## குவேக்கர்ஸ் குழு நாளை யாழ். வரும்

[யாழ்ப்பாணம்]

சர்வதேச சமாதான இயக்கமான குவேக்கர்ஸ் நிறுவனத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் நாளை யாழ்ப்பாணம் வரவிருக்கின்றார்கள். ஜெனீவாவிலிருந்து இங்கு வரவிருக்கும் இந்தக் குழு யாழ்ப்பாணத்தில் சில தினங்கள் தங்கியிருக்கும்.

இவர்கள் விடுதலைப் புலிகளின் தலைவர்களைச் சந்தித்து சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் சில வழிவகைகளை ஆராய்வர் எனவும் தெரியவருகின்றது.

## பிபிலை பொலிஸ் நிலைய தாக்குதல்

## காயமடைந்த பொலிசாரில் இருவர் நிலை மோசம்

[பதுளை]

பதுளை மாவட்டத்திலுள்ள பிபிலை பொலிஸ் காவல் அரண் ஒன்றின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதில் நான்கு பொலிசார் காயமுற்றனர்.

இவர்களில் இருவர் படுகாயங்களுக்கு இலக்காகி கவலைக்கிடமான நிலையில் உள்ளதாக தெரியவருகிறது.

பிபிலை இங்கினியாகல வீதி

(5 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

## சில்வஸ்ரர்

நொச்சிமோட்டையில் 03-02-92 அன்று நடைபெற்ற நேரடி மோதலில் விழுப்புண் அடைந்து, வைத்திய சிகிச்சை பெற்றுவந்த போராளியான

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வவுனியாக் கிராமங்கள் மீது விமானக் குண்டுவீச்சு

[வவுனியா]

வவுனியா மாவட்டம் கொந்தக்காரன் குளம், கோழியா குளம் ஆகிய பகுதிகளில் நேற்று முன் தினம் சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடாத்தின. பொதுமக்களின் வீடுகளை குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

இதேவேளை மன்னார்-வவுனியா வீதியிலுள்ள நெலுக்குளம் பகுதியில் நிலைகொண்டுள்ள சிறிலங்கா இராணுவத்தினர் அருகிலுள்ள கிராமங்களை நோக்கி கடந்த புதன்கிழமை தொடக்கம் எறிகணைத் தாக்குதலைநடாத்தி வருகின்றனர்.

# இந்திய - பாகிஸ்தான் எல்லையில் யுத்தம் வெடிக்கும் அபாயம்

## காஷ்மீர் பிரச்சினையால் நெருக்கடி நிலை

(டில்லி)

காஷ்மீர் எல்லையில் இந்திய - பாகிஸ்தான் துருப்புகள் மத்தியில் மோதல் ஏற்படும் அபாயம் எழுந்துள்ளதாக வெளிநாட்டு செய்திஸ்தாபனங்கள் தெரிவிக்கின்றன.

காஷ்மீர் பிரச்சினை நெருக்கடியான கட்டத்தை அடைந்துள்ளதால் இரு நாடுகளும் பெருமளவில் படையணிகளை எல்லையில் குவித்து வருகின்றன என்றும், மீண்டும் காஷ்மீர் விவகாரம் குறித்து இந்திய - பாகிஸ்தான் யுத்தம் ஒன்று வெடிக்கலாமென்றும் இந்த செய்தி ஸ்தாபனங்கள் கூறின.

ஜம்மு - காஷ்மீர் விடுதலை முன்னணி பாகிஸ்தான் கட்டுப்பாட்டிலுள்ள அசாத் காஷ்மீர் பிரதேசத்திலிருந்து 50,000 தொண்டர்களுடன் இந்திய எல்லையைக் கடந்து காஷ்மீருக்குள் பிரவேசிக்கப் போவதாக அறிவித்ததைத் தொடர்ந்தே இந்த கொந்தளிப்பான நிலை உருவாகியுள்ளது.

## பாக். அமைச்சரவை ஞாயிறு கூடுகிறது

காஷ்மீரில் நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கட்டுப்பாட்டுக் கோட்டை கடப்பதான ஜே.கே.எல் எவ். திட்டத்தை எப்படிச் சமாளிப்பது என்று முடிவு செய்யப் பாகிஸ்தான் அமைச்சரவை வரும் ஞாயி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாகிஸ்தானின் போக்கை தடுத்து நிறுத்துக

## இந்தியா வல்லரசுகளிடம் கோரிக்கை

(டில்லீ)

தமது நல்லுறவுகளையும், நல்லெண்ணங்களையும் பயன்படுத்தி இந்தியாவின் எல்லைப் பகுதிகளில் பதற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பாகிஸ்தான் செயற்படுவதை தடுத்து நிறுத்த வேண்டும் என்று ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளிடம் இந்தியா வலியுறுத்திக் கேட்டுள்ளது.

நேற்றுப் புதுடில்லியில் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, பிரான்சு, இங்கிலாந்து, சீனா ஆகிய நாடுகளின் தூதுவர்களை ஒரே மேசையில் இந்திய வெளியுறவுச் செயலாளர் ஜே. என். திக்ஷித் சந்தித்துப் பேசினார். அப்பொதுதான் இந்தியாவின் நிலைப்பாட்டை அவர் விளக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலிருந்து காஷ்மீர் விடுவிக்கப்படவேண்டும்

### - நவாப் ஷரீப்

காஷ்மீர் மாநிலம் விடுவிக்கப்படவேண்டுமென்று பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷரீப் பாகிஸ்தானில் ஆளுகையிலுள்ள ஆசாத் காஷ்மீர் பகுதியில் பொதுக் கூட்டமொன்றில் பேசும்போது தெரிவித்தார். இதேவேளை பாகிஸ்தான் பாராளுமன்றம் ஜம்மு காஷ்மீருக்கு ஆதரவாக தீர்மானம் ஒன்றையும் நிறைவேற்றியுள்ளது

இதேவேளை பாகிஸ்தான் எல்லைப்புறப் பகுதிக்கு மேலும் 40,000 துருப்புக்களை இஸ்லாமாபாத் அனுப்பி

[6 ஆம் பக்கம் பார்க்க]

## அணுவாயுதம் இருப்பதாக பாக். ஒப்புக்கொள்கிறது

(இஸ்லாமாபாத்)

ஒரு அணு ஆயுதத்தையாவது தயாரிக்கக்கூடிய நிலையில் பாகிஸ்தான் தற்போது இருப்பதாக அந்நாட்டின் வெளியுறவுச் செயலாளர் கூறியுள்ளார். அமெரிக்காவிலிருந்து வெளியிடப்படும் 'வாஷிங்டன் போஸ்ற்' சஞ்சிகைக்குப் பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில் அணுவாயுதமாக இணைக்கக்கூடிய பாகங்கள் அனைத்தும் தற்போது பாகிஸ்தானிடம் உள்ளன. அப்படி இணைக்கக் கூடிய ஆற்றலும் பாகிஸ்தானுக்கு உண்டு எனவும் குறிப்பிட்டார்.

இதற்கு முன்பாக பாகிஸ்தானிடம் அணுவாயுதத் தயாரிப்புத் திட்டம் இருப்பதாக

[6 ஆம் பக்கம் பார்க்க]

## பிரதமர் நரசிம்மராவ் எதிர்க்கட்சிகள் சந்திப்பு

(டில்லி)

காஷ்மீர் நிலபரம் குறித்து பாராளுமன்றத்திலுள்ள முக்கிய எதிர்க்கட்சிகளின் தலைவர்களுடன் இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் ஆலோசனை நடத்தியுள்ளார். பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானி, ஜனதா தளத்தைச் சேர்ந்த வி. பி. சிங், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இந்திர ஜித் குப்தா, இந்திய மாக்சிஸ்ட் கட்சியைச் சேர்ந்த ஹர்கிசன்சிங் சுர்ஜித் ஆகியோருடன் ஆலோசனை நடத்திய போது இந்தியப் பிரதமர்

(6ஆம் பக்கம் பார்க்க)

## பாக். கடும் விளைவுகளை சந்திக்க வேண்டி வரும்

### -சரத்பவார் எச்சரிக்கை

(பம்பாய்)

காஷ்மீர் தீவிரவாதிகள் எல்லைக் கோட்டைக் கடக்க பாகிஸ்தான் ஊக்கம் கொடுக்குமானால் கடுமையான விளைவுகளைச் சந்திக்கவேண்டிவரும் என பாகிஸ்தானை இந்தியா எச்சரித்துள்ளது.

எல்லைக் கட்டுப்பாட்டு கோடுகளை தாண்ட எவரையும் அனுமதிக்கக்கூடாதென்று சிம்லா ஒப்பந்தப்படி இருநாடுகளும் ஒப்புக்கொண்டிருக்கின்றன என்றும் இத்தகைய செயலை தடுக்கவேண்டியது

[6 ஆம் பக்கம் பார்க்க]

## வரி விளம்பரம்

### வைத்திய சேவை

தலைமுடி வளர, நரைமாறுவதற்கும் மாதவிலக்கு கோளாறு, முகப்பரு, நீடித்த வாதரோகம் ஆஸ்த்மா, குழந்தைப் பாக்கியம் போன்ற சகல நீடித்த வியாதிகளுக்கும் சிறந்த மெய்ஞ்ஞான ஆலோசனைப்படி நுணணியல் மருத்துவம். சந்திக்கும் நேரம்: காலை 9 00-12.00 மணி மட்டும். டாக்டர் எம் கருணாதரன் வேளாங்கண்ணி வைத்திய சாலை 614, ஓட்டுமடம், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (2179)

### தவறிவிட்டது

4. 2. 92ல் பிறவுண்வீதி அரசடி வீதி, கோயில் வீதிக்கிடையில் எமது இரு அடையாள அட்டைகள், உத்தியோக அடையாள அட்டைகள், கொழும்புபிரயாண பாஸ், ஆகியவை பேஸ் உடன் தவறிவிட்டது. தயவுசெய்து கண்டுஎடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். S. தவநாதர் S. யோதினி 3, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம் (2194)

### மணமக்கள்தேவையா

எம்மிடம் உள்நாட்டு வெளிநாட்டு மணமக்களும் மாற்றுச் சம்பந்தத்தை விரும்புவோரும் அல்லாதோரும் நிறைய இருக்கிறார்கள். மங்கள ஏஜென்சி கொய்யாத்தோட்டம் யாழ்ப்பாணம். (2196)


SPECIAL ENGLISH CLASSES

3ஆம் பிரிவு

ஆரம்பம்:

10 . 02 . 1992

(திங்கள்காலை 9.00மணி)

* SPOKEN ENGLISH (With Grammar)

* G.C.E (1992 Dec.)

இடம்:

22/4, விதானையார் வீதி, சுண்டிக்குளி.

(Ex நீதிபதி திரு யோகநாதன் இல்லம்)

By

R. Sivalingam

(2195)


# இந்திய கடற்படையில் சக்திவாய்ந்த நீர்மூழ்கி

[டில்லி]

உலகிலுள்ள மிகச் சக்தி வாய்ந்த நீர் மூழ்கிக் கப்பல்களுடன் ஒப்பிடக கூடிய வகையிலான நீர் மூழ்கிக் கப்பலொன்றை இந்தியா கட்டியுள்ளது ஐ.என்.எஸ். கல்க்கி என்று பெயரிடப்பட்டிருக்கும் இந் நீர் மூழ்கிக் கப்பல் நேற்று முன் தினம் பம்பாயில் பாதுகாப்பு அமைச்சர் சரத்பவாரால் இயக்கி வைக்கப் பட்டு கடற்படையுடன் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளது. இது டீசல் மின்சாரத்தில் இயங்குவதாகும்.

# ஒரே குடும்பத்தில் ஐவர் கோரமாக வெட்டிக்கொலை

(பதுளை)

பதுளை கிராந்துருக்கோட்டே சந்தியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் கோரமான முறையில் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். எழுபது வயது நிரம்பிய மூதாட்டி முப்பத்தியேழுவயதான பெண் மூன்று இளம் பையன்கள் ஆகியோரே வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

இக்கொலை காரக்கும்பல் இன்னும் கைது செய்யப்படவில்லையென்றும் இக் கும்பலினால் வெட்டப்பட்ட மேலும் ஒரு பத்துவயதுச் சிறுமி ஆபத்தான நிலையில் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

# தெரிவுக் குழுவின் தீர்மானத்தின் படியே புலிகளுடன் இனிப் பேச்சு

### - ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் தீர்மானப்படியே இனிமேல் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்தப்பட முடியும் என்று அமைச்சரவை பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார். நேற்று முன்தினம் பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அவர் மேலும் பேசுகையில், இனப் பிரச்சினைக்கு தீர்வு காணவென நியமிக்கப்பட்டிருக்கும் பாராளுமன்றத் தெரிவுக் குழு சுதந்திரமான முறையில கருததுப் பரிமாறலில் ஈடுபட்டு வருகின்றது. அது காணும் அரசியல் தீர்வே இறுதியானதாக அமையும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# சுதந்திரத்தின் இலக்கை எட்டமுடியவில்லை.

### -சபாநாயகர்

நாம் முதல்முறையாக சுதந்திரத்தை அடைந்த போதுஒரு பிரமாண்டமான உற்சாக எதிர்பார்ப்பு எழுச்சி நாட்டில் எழுந்தது இந்த எதிர்பார்ப்புகளும், அபிலாசைகளும் எட்டப்படவில்லை என்பதை நாம் ஒப்புக் கொள்ள வேண்டியிருக்கிறது என சபாநாயகர் எம். எச். முஹம்மது பாராளுமன்றத்தில் நடைபெற்ற 44 வது தேசியக்கொண்டாட்டத்தில் பேசினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் 44 வருடகால சுதந்திரத்திற்கு பின்னர் நாடு ஆழமான நெருக்கடியில் இருக்கிறது. நாட்டின் ஐக்கியம் அனர்த்தத்தில் இருககிறது பொருளாதார விடுதலைக்கான முக்கிய சந்தர்ப்பங்கள் இழக்கப்பட்டுவிட்டன. மக்களின் வாழ்க்கைத்தர உயர்வுக்கு பயன்பட வேண்டியபெருந் தொகையான நிதி இன்று அர்த்தமற்ற மோதல்களில் விரயமாக்கப்பட்டு வருகின்றன.

எனவே இந்த இனப் பிரச்சினைக்கு ஒருசமாதானத்தீர்வை காண்பதற்கு ஒரு சமாதானத் திட்டத்தை பாராளுமன்ற தெரிவுக்குழு கண்டு பிடிக்கும் என அவர் தெரிவித்தார்.

# சிவராசன் வீடு பொலிஸ் பொறுப்பேற்பு

ராஜீவ்காந்தி கொலைச்சம்பவத்துடன் தொடர்புபடுத்தி தேடப்பட்டவரும், பின்னர் தற்கொலைசெய்துகொண்டாரென அறிவிக்கப்பட்டவருமான சிவராசன் வசித்துவந்த வீட்டைத் தாங்கள் பொறுப்பேற்றிருப்பதாகப்பொலிஸார் அறிவித்துள்ளனர்.


# பாரதிதாசன் கல்வி நிறுவனம் (BECON)

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L 93 புதிய பிரிவு**

பொருளியல் - வரதராஜன்
அளவையியல் – S. S. மனோகரன்
கணக்கியல் < சௌந்தி / யோகராஜா
வர்த்தகம் - பிரபல ஆசிரியர்
இந்துநாகரிகம் - அருள்நங்கை
தமிழ் - மீரா
புவியியல் - ஜோசப்
அரசியல் - பஞ்சு

ஆரம்பம் 8-2-92

6.30 a.m

**A/L 92 Day Classes**

பொருளியல் - வரதராஜன்
கணக்கியல் - சௌந்தி
வர்த்தகம் - பசில்
இந்துநாகரிகம் / தமிழ் > அமரசிவம்
அளவையியல் - பிரபல ஆசிரியர்

ஆரம்பம் 11-2-92

8.00 a.m

(சி/3894)


# விசேட அறிவித்தல்

## அரசாங்க சேவையிலும் மாகாண அரசாங்க சேவையிலும் எழுதுனர் தரங்களுக்கு அமைய அடிப்படையில் ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை - 1992

1, மேற்படி பரீட்சை 15.02 1992 ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறும்.
2. அனுமதி அட்டைகள் 06 02.1992 இல் விண்ணப்பதாரிகளின் முகவரிக்குஅனுப்பப்பட்டுள்ளது. (இடம் பெயர்ந்த விண்ணப்பதாரிகள் தமது பகுதி தபால் நிலையத்துடன் தொடர்பு கொண்டு அனுமதி அட்டைகளைப்பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.)
3. அனுமதி அட்டைகள் கிடைக்கப்பெறாத பரீட்சார்த்திகள் பின்வரும் விபரங்களுடன் வடமாகாண கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொள்ளவும்.
   1. விண்ணப்பம்பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட்டதாயின் தபால் நிலையத்தின் பெயர், அனுப்பப்பட்ட திகதி, பதிவுத்தபால் இலக்கம்.
   2. செயலகத்தில் கையளிக்கப்பட்டதாயின் வழங்கப்பட்ட பற்றுச்சீட்டு இலக்கம்,
4. நேரசூசிகை:- 15-02-1992 காலை 9.00 - 10.30- உளச்சார்பு
   15-02.1992 காலை 10 45 - 12 15 மொழித்தேர்ச்சி
5. பரீட்சை மண்டபத்தில் தமது ஆள் அடையாளத்தை நிரூபிக்க தேசிய அடையாள அட்டை/கடவுச்சீட்டு/தபால்கந்தோரால் வழங்கப்படும் செல்லுபடியான அடையாள அட்டை/சாரதி லைசென்ஸ் இவற்றிலொன்றைச் சமர்ப்பிக்க வேண்டும்.
6. 1962 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆள்மாறாட்டம், பிரதிசெய்தல், முறையின்றி நடந்து கொள்ளல் போன்ற செயற்பாடுகளிலீடுபடும் அனைவரும் நடவடிக்கைகளுக்குள்ளாவர்.
7. போக்குவரத்து வசதியின்மையைக் காரணங்காட்டி பரீட்சை மண்டபங்களுக்கு பிந்திவருதல் பரீட்சை விதிகளுக்குமாறானவையாகும். எனவே பரீட்சார்த்திகள் குறிப்பிட்ட நேரத்திற்கு 10 நிமிடம் முன்பாக பரீட்சை மண்டபத்தில் ஒழுங்கு செய்த தங்கள் ஆசனங்களில் அமர்தல் வேண்டும்.

கா. மாணிக்கவாசகர்
அரசாங்க அதிபர்/மாவட்ட ஆணையாளர்.
யாழ். மாவட்டம்.

(சி/3901)

# நினைவு கூருகின்றோம் 1992 - 02 - 08

1986 ஆம் ஆண்டு இதே தினத்தில் பருத்தித்துறையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான மோதலின் போது வீரச்சாவெய்திய

**2ஆம் லெப். முரளி** [ வேலுச்சாமி தெய்வேந்திரசிகாமணி - பொலிகண்டிமேற்கு, வல்வெட்டித்துறை ]

**தர்மராஜன்/உதயன்** [ சந்தியாப்பிள்ளை ஜேசுதாஸ் - கடற்கரைவீதி, பருத்தித்துறை ]

**போமன்** [ ஞானப்பிரகாசம் அருள்ஞானதாஸ் - தும்பளை பருத்தித்துறை ]

1987 ஆம் ஆண்டு கும்புறுப்பிட்டியில் சிறிலங்காப் படையினரின் சுற்றிவளைப்பின்போது வீரச்சாவெய்திய

**பவன்** [ தியாகராசா சுபேந்திரன் - திருக்கோணமலை ]

1988 ஆம் ஆண்டு இந்தியப்படையினரின் சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய நாட்டுப்பற்றாளரான நடேசன் (அம்பாறை)

தேசவிரோதிகளினால் சுடப்பட்டு வீரச்சாவெய்திய

★ **சுனில்** [ வடிவேல் கந்தசாமி - தங்கநகர் மூதூர் ]

ஏறாவூரில் உலங்கு வானூர்தித் தாக்குதலில் கொல்லப்பட்ட பொதுமகன்

1989 ஆம் ஆண்டு உடையார்கட்டில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய

**லெப். செல்லன்தம்பி** [ ஆறுமுகம் மகேந்திரன் - 2ஆம் வட்டாரம், புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு ]

கொக்குவில் கிழக்கில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு கொல்லப்பட்ட யாழ். பிறவுண் வீதியைச் சேர்ந்த இளைஞன்

1991 ஆம் ஆண்டு பறநட்ட கல்லில் சிறிலங்காப் படையினரின் மோதலின்போது விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய

**அஜந்தன்** [சின்னையா சூரியகுமார் - கல்லாறு, செட்டிகுளம் ]

## ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

★ மேற்குறிப்பிட்ட மாவீரர் சுனில் ஈரோஸ் அமைப்பு இயங்கிய காலத்தில் அதனுடன் இணைந்து செயற்பட்டவராவர்.

**விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி**

(சி-3900)

# பிரேமதாசா எப்படிப்பட்ட மனிதர்?

சிறிலங்காவின் அரசியல் யாப்பின் பிரகாரம் பிரேமதாசாவே சிங்கள ஆயுதப்படைகளின் பிரதம தளகர்த்தர் ஆவார். எனினும் படையினரை அவர் முழுமையாக நம்பியதில்லை. அவர் இயல்பாகவே ஒரு சந்தேகப் பிராணி. நிலைமையைப் பார்த்து நிதானமாக நடப்பவர். விசுவாசிகளும் விஷஜந்துகளும் வாழும் அரசியல் காட்டினுள் அவதானமாக அடியெடுத்து வைக்கவேண்டும் என்பது அவருக்கு தெரியும். நீண்டகாலமாகவே கண்டிய ஆளும்வர்க்கத்தின் கைப்பொம்மையாக இராணுவம் செயற்பட்டு வந்திருக்கிறது. வெளிநாட்டு, உள்நாட்டு ஊடுருவல்களின் களமாகத் திகழ்ந்த இராணுவ அமைப்பிலிருந்து ஆபத்துக்கள் எழலாம் என பிரேமதாசா அஞ்சினார். தனது அரசியல் எதிரிகளான லலித், காமினி போன்றோரின் ஊடுருவல் இராணுவத்திற்குள் இருந்ததை அவர் அறிவார். சுதந்திரக் கட்சியின் ஆதிக்கமும் இராணுவத்தின் அடிமட்டத்தில் இருந்தது. விஜயவீரவின் ஆட்களும் முகம்தெரியாத மனிதர்களாக இயங்கி வந்தனர். அத்துடன் இந்திய உளவுப்படையான 'றோ'வினது அரூபகரமும் இராணுவத்திற்குள் ஊடுருவியிருந்தது.

ஆரம்பகாலத்தில் ஜெனரல் ஆட்டிகலையும், ரஞ்சன் விஜயரத்தினாவும் பிரேமதாசாவின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதிகளாக இராணுவத்தின் கடிவாளத்தை கெட்டியாகப் பிடித்திருந்தனர். அவர்களுக்கு பின்னர் ஜெனரல் ரணதுங்காவிடமும் ஹமில்டன் வணசிங்காவிடமும் இந்தப் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டன. ஜெனரல் ரணதுங்கா பிரேமதாசாவின் மனைவியின் நெருங்கிய உறவினர். ஹமில்டன் பிரேமதாசாவின் விசுவாசி. இவர்கள் இருவர் மூலம் இராணுவ இயந்திரத்தை இயக்கிவந்த பிரேமதாசா தனது சொந்தப் பாதுகாப்பு போன்ற அந்தரங்க விவகாரங்களில் இராணுவத்தை நெருங்கவிடுவதில்லை. ஜனாதிபதி பதவியில் ஏறிய காலத்திலிருந்து இன்றுவரை விசேட பொலிஸ் அதிரடிப் படையினரே பிரேமதாசாவின் மெய்ப்பாதுகாவலர்களாக செயற்பட்டு வருகின்றனர்.

லலித், காமினி கோஷ்டியினர், இந்திய உளவுப்படையுடனும், இராணுவ அதிகாரிகள் சிலருடனும் சேர்ந்து தனக்கு எதிராக சதி செய்து வந்ததை பிரேமதாசா நீண்டகாலத்திற்கு முன்னரே மோப்பம் பிடித்தார். இதனால் காமினியை பதவியிலிருந்து ஒதுக்கி வைத்த பிரேமதாசா லலித் மீது விழிப்பாக இருந்தார். ஆனால் சதிகாரர்கள் நல்லதொரு சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தனர்.

கொழும்பு பேச்சுவார்த்தை காலத்தில் பிரேமதாசா புலிகளுக்கு ஆயுதம் வழங்கினார் என்ற தகவல் லலித்திற்கு எட்டியது. இந்த விவகாரத்தை பூதாகரமாக்கி பிரேமதாசாவுக்கு குழிபறித்து விடலாமென லலித் கோஷ்டி திட்டம் தீட்டியது. கொழும்பிலுள்ள இந்திய தூதுவரின் வாசஸ்தலத்தில் சதியாலோசனைகள் நடைபெற்றன. தேசத்துரோக குற்றப்பத்திரிகை சபாநாயகரிடம் தாக்கல் செய்யப்பட்டது. கொழும்பில் ஒரு அரசியற் சூறாவளி எழுந்து பிரேமதாசாவின் ஆட்சிப்பீடத்தை ஆட்டம் காணச் செய்தது. புற்றிலிருந்த பாம்புகள் எல்லாம் ஒரே நேரத்தில் படமெடுத்து ஆடியதால் பிரேமதாசா அதிர்ந்து போனார். என்றாலும் மிகவும் சாணக்கியத்துடன் அவர் காய்களை நகர்த்தினார்.

புலிகளுக்கு ஆயுதம் வழங்கியதை பிரேமதாசா மறுக்கவில்லை. தமிழ்த் தேசிய இராணுவத்துடன் சமர்புரிவதற்கு புலிகளுடன் ஆயுதங்களைப் 'பகிர்ந்து' கொண்டதாக' அறிக்கை வெளியிட்டார். இராணுவத் தலைமை



யும் பிரேமதாசாவின் கூற்றை மறுக்கவில்லை. ஏதோ தமிழனைத் தமிழன் அழிக்க ஆயுதங்கள் கைமாறப்பட்டதாக நினைத்து சிங்கள வெகுசனம் திருப்தியடைந்தது. அமைதிப் படையை அழிக்கவே ஆயுதம் வழங்கப்பட்டது என இந்திய தரப்பிலிருந்து எழுந்த ஆட்சேபக் குரலும் பிசுபிசுத்துப் போயிற்று.

இந்த ஆயுத விவகார சர்ச்சைக்குள் தலையிட்டு குட்டையை குழப்ப புலிகள் விரும்பவில்லை. எப்பொழுது, எதற்காக, எவ்விதம், எந்தளவு ஆயுதங்கள் பிரேமதாசாவிடமிருந்து அள்ளப்பட்டது என்பது பற்றி புலிகள் எதுவுமே கூறவில்லை. பெருந்தன்மையுடன் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள் போலும், எனினும் எல்லோரையும் மிஞ்சிய சாணக்கியர்கள் என்பதை புலிகள் நிரூபித்துவிடத் தவறவில்லை

பிரேமதாசாவின் ஆயுதங்களைக் கொண்டோ, அல்லது சிங்கள இராணுவத்தின் உதவியுடனோ தமிழ்த் தேசிய இராணுவத்தை நிராயுதபாணி

**பிரம்மஞானி**

கள் ஆக்கவில்லை என விளக்கி புலிகளின் சர்வதேசப் பிரிவு வெளியிட்ட அறிக்கை கொழும்பில் இருட்டடிப்பு செய்யப்பட்டது.

இது இவ்வாறிருக்க பிரேமதாசாவுக்கு சார்பாக சபாநாயகர் திடீரென குத்துக்கரணம் அடித்ததால் நம்பிக்கையில்லாப் பிரேரணை செத்துப்போனது. அரசியற் சூறாவளியை எழுப்பியவர்கள் அந்தப் புயற்காற்றிலேயே அடித்துச் செல்லப்பட்டனர்.

தென்னிலங்கையில் அரசியற் கொந்தளிப்பு தணிய வடகிழக்கில் யுத்தம் உக்கிரமடைந்தது.

சிங்கள இராணுவம் வெற்றிப்பாதையில் வீறுநடை போடுவதாக எண்ணியதால் சமாதானத்தின் கதவுகளை திறந்துவிட பிரேமதாசா விரும்பவில்லை. தொண்டமான் விடுத்த சமாதானப்புறாவையும் சிங்களப் பேரினவாதக் கழுகு இடைமறித்து வீழ்த்தியது.

நீண்டகாலப்போரினால் புலிகள் இயக்கம் பலவீனமடைந்திருக்கிறது என்ற தப்பான மதிப்பீடும், இந்திய, தமிழ்நாட்டு அரசுகளின் அடக்குமுறை நடவடிக்கைகளால் புலிகளின் பின்தளமும், கடற்பாதையும் மூடப்பட்டு விட்டது என்ற நம்பிக்கையும், தமிழீழ மக்கள் மத்தியில் புலிகள் இயக்கம் ஆதரவை இழந்து விட்டது என்ற பொய்யான கணிப்பும் இராணுவவாதிகளை ஊக்குவித்து வருகிறது.

இரண்டாவது தடவையும் ஜனாதிபதியாக சிம்மாசனம் ஏறவேண்டும் என்பது பிரேமதாசாவின் அந்தரங்க ஆசை. தமிழருக்கு உருப்படியான சுயாட்சி அதிகாரங்கள் வழங்கி இனப்பிரச்சினையை தீர்க்க முயற்சித்தால் சிங்கள-பௌத்த பேரினவாத சக்திகளின் பகைமையை தேடிக்கொள்ள நேரிடும். இதனால் அடுத்த தடவையாக ஆட்சிபீடம் ஏறும் அரிய சந்தர்ப்பங்கள் கெட்டுவிடும். ஆகவே, போரைத் தொடர்ந்து பிரச்சினையை இழுத்தடிப்பதே சாலச் சிறந்த வழி எனப் பிரேமதாசா எண்ணுகிறார். இரண்டரை ஆண்டுகளாக, எதுவித கருத்தொற்றுமையும் இல்லாமல் இழுபட்டுவந்த அனைத்துக் கட்சி மாநாட்டிலிருந்து அதே கட்டமைப்புடைய இன்னொரு கூட்டுக் குழுவிடம் (பாராளுமன்றத் தெரிவுக் குழுவிடம்) தமிழர் பிரச்சினையை ஒப்படைத்துவிட்டதால் இன்னும் இரண்டரை வருடங்களுக்கு இவ்விவகாரத்தை இழுத்தடிக்கலாம் என்பது பிரேமதாசாவின் திட்டம்.

தொண்டமானின் சமரச முயற்சிக்கு பிரேமதாசாவின் ஆசீர்வாதம் இருப்பதாக பலர் எண்ணியதுண்டு. ஆனால் உண்மையில் தொண்டமானின் தீர்வுத் திட்டமும், அவர் முயற்சியும் புலிகளுடன் கலந்தாலோசிக்க மேற்கொண்ட முயற்சிகளும் பிரேமதாசாவுக்கு பெரும் சங்கடத்தையே ஏற்படுத்தியது. புலிகளுடன் போரைத் தொடர்ந்து, புலிகளை தமிழ் மக்களிடமிருந்து அந்நியப்படுத்தி அழிக்க வேண்டுமென பிரேமதாசா கங்கணம்கட்டி நிற்க, புலிகளைத் தமிழர்களின் பிரதிநிதிகளாக அங்கீகரித்து புலிகளுடன் நேரடிப் பேச்சுகளை நடத்த தொண்டமான் முனைந்தது பிரேமதாசாவுக்கு பெரிய சிக்கலை ஏற்படுத்தியது. எனினும் மலையகத்தின் முடிசூடா மன்னரை தோட்டப் பாட்டாளி வர்க்கத்தின் பெருந்தலைவரை நேரடியாகப் பகைத்துக் கொள்ளும் துணிவு பிரேமதாசாவுக்கு ஏற்படவில்லை. அது மட்டுமின்றி வடகிழக்கு நிரந்தரமாக இணைந்த தமிழர் தாயகத்தை அங்கீகரிக்கும் தொண்டமானின் முற்போக்கான தீர்வுத் திட்டத்தையும் பிரேமதாசாவால் ஜீரணிக்க முடியவில்லை. எனவே பௌத்த பீடத்தை முடுக்கிவிட்டு, தொண்டமானுக்கு எதிராக சிங்களப் பேரினவாதப் பூதத்தை ஏவிவிட்டதில் போதிசத்துவருக்கு நிறையப் பங்குண்டு. இறுதியில் பாராளுமன்றத் தெரிவுக் குழுவின் அதிகாரத்தைப் பயன்படுத்தி தொண்டமானுக்கு வாய்ப்பூட்டுப் போட்டதும் அவரது திருவிளையாடல்களில் ஒன்று தான்.

தமிழர் பிரச்சினை குறித்து பிரேமதாசா தொடர்ச்சியாக நிகழ்த்திவரும் கதாகலாட்சேபங்களில் இருந்து அவர் எதைச் சொல்ல வருகிறார் என்பதை கிரகிப்பது மகாசிரமம். சொற்களின் அர்த்தப் பரிமாணங்களில் இருந்து அவரது செயற்பாடுகளை ஊகித்துக்கொள்ள முடியாது.

''யுத்தம் அர்த்தமற்றது, அசட்டுத்தனமானது, யுத்தத்தில் எவருமே வெற்றிகொள்வதில்லை'' என்று அவர் உதிர்க்கும் தத்துவ முத்துக்களில் முரண்பாடான அர்த்தத்தைத்தான் நாம் இனங்கண்டு கொள்ளலாம். சமாதானம், ஐக்கியம் இறைமை பற்றி என்று அவர் மீட்டும் ராகங்கள் கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன சினிமாப் பாட்டுப்போல சுவையிழந்து போய்விட்டன.

பிரேமதாசாவின் உண்மையான கருத்துக்களை அறிய வேண்டுமென்றால் அவர் சொற்சிலம்பாடும் வில்லுப் பாட்டுகளை கேட்காது, அவரது 'ஆவி' எழுத்தாளர்களின் ஆக்கங்களை நுணுக்கமாக பார்க்கவேண்டும். 'டெய்லி நியூஸ்', 'ஒப்சேவர்' பத்திரிகை ஆசிரியர்கள், ஜோகன் பெரேரா, தயான் ஜெயதிலகா போன்றோரின் எழுத்துக்களிலிருந்து பிரேமதாசாவின் எண்ணவோட்டத்தை இனம் கண்டு கொள்ளலாம். இனப்பிரச்சினை குறித்து இவர்கள் என்ன சொல்லுகிறார்கள்? பிரேமதாசாவின் அந்தரங்க ஆவி என்ன சொல்கிறது?

''யுத்தத்தால் இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது. யுத்தத்தால் நாட்டின் செல்வம் நாசமாகிப்போகிறது. ஆனால் யுத்தம் அவசியம். புலிகளுக்கு எதிரான யுத்தம் தவிர்க்கமுடியாதது. ஏனென்றால் பாசிசப்புலிகளின் பயங்கரவாதத்திலிருந்து தமிழ் மக்களைக் காப்பாற்றவேண்டும். தாயகத்தை விடுவிக்கவேண்டும். புலிகளை ஒழித்துக்கட்டும் யுத்தத்தை தொடர்ந்து நடத்தும் அதேவேளை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் வழிவகைகள் ஆராயப்படவேண்டும். ஜனநாயக சக்திகளாக ஒற்றையாட்சியை ஏற்று அரசாங்கத்தை அரவணைத்து நிற்கும் தமிழ்க் குழுக்களுடன் கலந்தாலோசித்து ஒரு தீர்வுத் திட்டத்தை வகுக்கவேண்டும். நாட்டில் சனநாயகம் தழைத்தோங்க, இன ஐக்கியம் வளர இதுவே சிறந்த வழி.''

பிரேமதாசாவின் நாட்டுத்தனமான அணுகுமுறை இதிலிருந்து தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இராணுவ அடக்குமுறை மூலம் புலிகளை அழித்து, தமிழர்களைப் பாதுகாத்து, எட்டப்பர் கோஷ்டிகளுக்கு ஆட்சி அதிகாரம் கொடுத்து, தமிழர் பிரச்சினையை தீர்த்துவிட இந்திய அரசு கையாண்ட அதே அணுகுமுறையைத்தான் பிரேமதாசாவும் கடைப்பிடிப்பதுபோல தெரிகிறது.

அமைதி என்று, பாதுகாப்பு என்று, ஐக்கியம் என்று, அப்புக்காவகளை நீட்டும் ஆக்கிரமிப்பாளர்களைப் பற்றி தமிழ் மக்கள் நன்கறிவார்கள். பிரேமதாசாவின் நாடகம் தமிழீழத்தில் அரங்கேறப் போவதில்லை.

(முற்றும்)

## 5ஆண்டுகளில் 5000 பேருக்கு எயிட்ஸ் ஏற்படலாம்

இலங்கையில் இன்னும் ஐந்து ஆண்டுகளில் சுமார் 5000 பேர் வரையில் எயிட்ஸ் நோய் பாதிப்புக்குள்ளாகலாம் அண்மைக் காலங்களில் மேற்கொள்ளப்பட்ட இரத்த பரிசோதனைகளின் மூலம் ஆயிரம் பேருக்கு இந்த நோய்களுக்கான கிருமிகள் தொற்றி இருப்பதாக அறிக்கைகள் மூலம் தெரியவருவதாக சுகாதார கல்விப் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் மார்க்கஸ் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கண்டியில் எயிட்ஸ் நோய் சம்பந்தமாக பல்வேறு பத்திரிகையாளர் கலந்து கொண்ட கருத்தரங்கிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில் இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் எனக் கண்டுபிடிக்கப்பட்டவர்கள் மொத்தம் 43 பேரே ஆகும் இவர்களில் பதினொரு பேர் வெளிநாட்டவர்களாவர். இலங்கையைச் சேர்ந்த 37 பேரில் 9 பேர் இதுவரையில் இறந்துவிட்டனர் எனவும் தெரிவித்தார்.

## கலைஞர்கள் ஒன்றுகூடல்

கடந்த 1-2-92காலை 10.00 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்ட மாதந்தோறும் முதற் சனிக்கிழமைகளில் இடம்பெறும் சகல கலைஞர்களுக்குமான ஒன்றுகூடல் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று (8-2-92)பி.ப 3.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது வலிகாமப் பிரிவிலுள்ள சகல கலைஞர்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள கலை பண்பாட்டுக் கழகத்தின் யாழ்மாவட்டப் பிரிவினர் கேட்டுக் கொள்கின்றனர்

## வாராந்த கருத்தரங்கு

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக்கழகத்தின் ஆதரவில் நடைபெறும் வாராந்தக் கருத்தரங்கில் இவ்வாரம் ''எனது கலை இலக்கியத்துறை அனுபவங்கள்'' என்ற தலைப்பில் திரு. அ. யேசுராசா உரையாற்றவுள்ளார். நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணியளவில் விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழக கேட்போர் கூடத்தில் இக் கருத்தரங்கு இடம்பெறும்.

## சைக்கிள் திருட்டு

பூட்டிய நிலையில் வீட்டிற்குள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த இரண்டு சைக்கிள்கள் ஒரே நேரத்தில் திருடப்பட்டுள்ளன யாழ்-விக்டோறியா வீதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் மண்டைதீவைச் சேர்ந்த ந. விஜயசுந்தரம் என்பவரது 'ஹீரோ' சைக்கிளும், மற்றுமொரு 'ப்ளைங் பிஜியன்' லேடிஸ் சைக்கிளுமே திருடப்பட்டன. இத் திருட்டுப்பற்றி தமிழீழ காவல் துறையினரிடம் முறையீடு செய்யப்பட்டுள்ளது. (22)

# "இனப்பிரச்சினைக்கு சுமுகத் தீர்வை" இலங். ஒரு சாரார் விரும்பவில்லை

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முன்வைத்த சமாதானப் பிரேரணைகளை மட்டம் தட்டி விடுவதற்கு பல முனைகளில் இருந்து ஒன்றிணைக்கப்பட்ட முயற்சிகள் எடுக்கப்படுகிறது. அமைச்சர் தொண்டமானினால் முன்வைக்கப்பட்ட இப்பிரேரணைகளை இவ்வாறு மட்டம் தட்ட முயற்படுவது ஏன்? இதற்கு மூன்று காரணங்கள் இருக்கக்கூடும். தொண்டமான் அவர்கள் தமிழராக இருப்பதை முதல் காரணமாக கூறலாம். அடுத்தது [illegible]ங்களில் நம்பிக்கை வைத்து பிரேரணைகளை அவர் முன்வைத்தார். அத்துடன் இ.தொ.கா.வினால் நியாயமானதும், சரியானதும் எனக் கருதப்படும் தீர்வை விவாதித்து நியாயப்படுத்துவதற்கான சவாலை ஏற்றுக்கொண்டார். மூன்றாவதாக தொண்டமான் புலிகளுடன் சமாதானம் பேச முன்வந்து அதற்கான சில நடவடிக்கைகளையும் மேற்கொண்டார். சிலர் இந்த அணுகுமுறையை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் இன்று எழுந்துள்ள சூழ்நிலையானது தமிழர் பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதனை இலங்கையின் ஒரு சாரார் விரும்பவில்லை என்ற முடிவுக்கே வரவழிவகுக்கிறது.

## யோசனைகளில் புதுமை இல்லை

தொண்டமானின் பிரேரணைகளில் புதுமை ஏதும் இல்லை. 1984 ஆம் ஆண்டு ஜனவரி 10 ஆம் திகதி தொடக்கம் இன்று வரை நடைபெற்ற பல்வேறு கலந்துரையாடல்களிலும், மகாநாடுகளிலும் விவாதிக்கப்பட்ட விடயங்கள்தான். அவ்வப்போது ஆட்சேபிக்காமல் இருந்துவிட்டு ஏன் இத்தருணத்தில் இவற்றிற்கு எதிராக மக்களைத் தூண்டுகின்றனர். அவருடைய பிரேரணையை ஏன் முற்றுமுழுதாக நிராகரிக்கின்றனர்?

தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எந்தவொரு யோசனையையும் முன்வைக்காத ஐ.தே.க. வினதும், சுதந்திரக் கட்சியினதும், மனப்பாங்கை அவர்கள் ஆதரிக்கின்றார்களா? அல்லது தமிழர் பிரச்சினை தமக்குப் பிரச்சினையில்லையென்று கருதுகின்றார்களா?

1956, 1966, 1987 முதலிய ஆண்டுகளில் தமிழர் தரப்பினர்களுடன் ஏதோவொரு இணக்கம் காணப்பட்டதன் பின்னரோ, அல்லது உடன்படிக்கை காணப்பட்டதன் பின்னரோ தான் எதிர்ப்புகள் எழுந்தன. இத்தகைய எதிர்ப்புக்கு கூறப்பட்ட பிரதான காரணம் இத்தகைய இணக்கம் அல்லது உடன்படிக்கை இரகசியமாகக் காணப்பட்டது என்பதேயாகும். ஆனால் வெளிப்படையாக எந்த இரகசியமும் அற்ற வகையிலும் ஒரு முயற்சி மேற்கொள்ளப்படும் போது அதனை முளையிலேயே மட்டம் தட்டி விடப்பார்க்கிறார்கள்.

ஒரு சிலர் தமிழர்களாகிய நாம் எதைச் செய்தாலும் அது சரியாகப்படுவதில்லை. இந்நிலையிலிருந்து நாம் எங்கு செல்ல முடியும்? இவ்வகையான மனப்பான்மை தமிழர்கள் மத்தியில் போராளிகள் உருவாகுவதற்குக் காரணமாக இருந்தது. இதே போக்கு நீடித்தால் தமிழ் ஈழம் என்னும் ஒரு நாடு உருவாகுவதற்கு காரணமாகும்.

அமைச்சர் தொண்டமான் மேற்கொண்ட முயற்சி இரண்டு விடயங்களைத் தெளிவாக்க உதவியுள்ளது. ஒன்று காமினி ஜெயசூரியா போன்ற அரசியல்வாதிகளின் வீண் வீம்பான அச்சுறுத்தல்களை வெளிப்படுத்தியுள்ளது. மற்றது பௌத்த சமய மகாநாயக்கர்களின் உயர்பீடத்தினர் பௌத்த சமய கோட்பாடுகளுக்கு முரணாகச் செயற்பட்டுள்ளனர் என்பது.

"சிங்கத்தின் ஆவேசத்தை தூண்டிவிட்டால் வேறெந்த சக்தியும் அதனை எதிர்த்து நிற்க முடியாதென" காமினி ஜெயசூரியா கூறுகின்றார். இவ்வாறான கூற்றுக்கள் இன்னும் ஒரு இனக்கலவரத்திற்கு வழிகோலும். அவ்வாறு நடந்தால் தமிழர்களைக் குறை கூற முடியாது. சர்வதேச சமூகம் இந்நிலையை நன்கு அவதானித்து வருதல் வேண்டும்.

**அமைச்சர் தொண்டமான் முன் வைத்த யோசனைகள் தொடர்பாக தென்னிலங்கையில் எழுந்துள்ள சூழ்நிலைகளில் சட்டத்தரணி குமார் பொன்னம்பலம் அவர்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையின் ஒரு பகுதி இது.**

## பண்டாரநாயக்கா போல் நானும் இறக்க நேரிடலாம் - லலித்

(கொழும்பு)

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவைப்போல் நானும் இறக்க வேண்டி நேரிடலாம். ஆனால் தனி நபர்களை விடக் கொள்கைகளே முக்கியமானவை என்பதால் நான் இருக்கும்போது சாதிப்பவற்றைவிட அதிகமான சாதனை எனது மரணத்திற்குப் பின் இருக்கும் என்று முன்னாள் கல்வி உயர் கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி கூறினார்.

அனுராதபுரம் மாவட்டத்தில் காட்டசஸ்திலிய எனுமிடத்தில் நடைபெற்ற சேவிபதில் நிகழ்ச்சியொன்றில் கலந்துகொண்டு பேசிய அவர் மேலும் கூறுகையில், அராஜகமான சர்வாதிகார தலைமையிலிருந்து நாட்டைப் பாதுகாப்பதற்காக நாங்கள் தொடங்கியுள்ள இந்த ஜனநாயக இயக்கம் ஒரு தோட்டாவினால் நான் இறக்க நேரிட்டாலும் தொடரும் எனவும் குறிப்பிட்டார். அத்துடன் இன்றைய தலைமை தனது தனிமனித நாடகத்தை நீண்ட நாள்கள் தொடர முடியாது எனவும் கூறினார்.

மேலும் எங்களுக்கு ரூபவாகினியைத் தந்தது ஜப்பான் அரசு. அதை எவ்வாறு பயன்படுத்துகிறது என்பதை அவர்கள் அவதானிக்கின்றனர். அ[illegible] தனி மனிதரின் இமேஜைக் கட்டி வளர்ப்பதை நிறுத்தாவிட்டால் ஜப்பான் உதவி வழங்குவதை நிறுத்தக் கூடும் எனவும் தெரிவித்தார்.

## புலிகளுக்கு உதவியதாக பொலிஸ் அதிகாரியின் சகோதரன் கைது

(கொழும்பு)

விடுதலைப் புலிகளை வெளிநாடு அனுப்பியதாக திருமலையில் பொலிஸ் அதிகாரியாக இருந்து கொல்லப்பட்டவரின் சகோதரர் மீது பொலிசார் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.

விடுதலைப் புலிகளை வெளிநாட்டிற்கு அனுப்புவதாகக் கிடைத்த புகாரின் பேரில் கைதாகி தடுத்து வைக்கப்பட்ட மொரட்டுவவைச் சேர்ந்த மகிந்த நிலவீர என்ற நபர் மோசடிக் குற்றச்சாட்டில் இரண்டாயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். இவர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி கே. வி. தவராஜா கூறியதாவது: இவரின் மூத்த சகோதரர் திருமலை பொலிஸ் பொறுப்பதிகாரியாக இருந்து பயங்கரவாத நடவடிக்கையில் கொல்லப்பட்டவர். இவரின் குடும்பத்தினருக்கு வேண்டிய உதவிகளைச் செய்வதாக பொலிஸ்மா அதிபர் உறுதி அளித்துள்ளார். நிலைமை இப்படியிருக்க புலிகளை இவர் வெளிநாடு அனுப்புவாரா எனக் கேள்வி எழுப்பினனர்.

## இடம் பெயர்ந்த மாணவர் கல்விக்கு புதிய நடைமுறை

(யாழ்ப்பாணம்)

இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்துள்ள பாடசாலை மாணவர்கள் தொடர்பாக பின்பற்றப்பட வேண்டிய புதியநடைமுறைகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. சகல மாணவர்களும் சமமாகக் கணிக்கப்படுதல் வேண்டும். பாடசாலை செயற்பாடுகளில் அனைத்து மாணவர்களையும் சமமாக பங்குபற்றச் செய்ய வேண்டும். இடம் பெயர்ந்த மாணவர்கள் அனைவரையும் மனித நேயத்துடன் நடாத்திக் கொள்ளுதல் வேண்டும், அத்துடன் பாடசாலைச் சீருடைகள் பற்றி இடம்பெயர்ந்த மாணவர்களைக் கட்டாயப்படுத்துதல் கூடாது; எந்தவகையிலும் நன்கொடைகள் பெறுதல் கூடாது என்பதுடன் வசதிக்கட்டணம் பெறும் பொழுது அதற்கான பற்றுச் சீட்டுக்களை வழங்குதல் வேண்டும், பாடசாலைகளில் மாணவர்கள் அனுமதிக்கப்படும் சமயங்களில் பாடசாலை விடுகைப்பத்திரம், பிறப்புச் சான்றிதழ் போன்ற ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்குப் பெற்றோருக்கு போதிய கால அவகாசம் வழங்கப்பட வேண்டும். இவ்வாறான நடைமுறைகளை நடைமுறைக்கு கொண்டுவரும்படி யாழ். கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் சகல பாடசாலை அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் அனுப்பி வைத்திருக்கிறார். (க)

## அடையாள அட்டையில்லாத மலையக மக்கள் நடமாடமுடியாது அவதி

தேசிய அடையாள அட்டை இல்லாமல் அகலவத்தை, புலத்சிங்கள, முத்துகம, மொலவத்த, பதுரெலியா ஆகிய பகுதிகளில் வாழும் தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் தமது கிராமங்களை விட்டு வெளியேற முடியாதிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தேசிய அடையாள அட்டை இல்லாதவர்கள் முக்கிய விடயங்களைக் கவனிக்க கொழும்பு, கண்டி போன்ற நகரங்களுக்குப் பயணம் செய்ய முடியாது கஷ்டப் படுவதாக மலை நாட்டுத் தொழிற் சங்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தொழிற்சங்கம், சமாதான நீதவான மற்றும் தோட்ட நிர்வாகம் வழங்கும் அடையாள அட்டைகள் பாதுகாப்புப் படை மற்றும் பொலிஸ் சோதனைச் சாவடிகளில நிராகரிக்கப் படுவதாகச் சொல்லப்படுகிறது.

## வடக்கு - கிழக்கு இணைப்பு; 'ஈரோஸ்'எம்.பிகள் எதிர்ப்பு

வடக்கு - கிழக்கு மாகாணங்கள் வாக்கெடுப்பிற்கு விடப்படாமல் இணைக்கப் படுவதை தாம் எதிர்க்கப் போவதாக ஈரோஸ் சார்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இரு உறுப்பினர்களும் கருத்து வெளியிட்டுள்ளனர். மட்டக்களப்புமாவட்ட எம். பியாக இருக்கும் பசீர் சேகு தாவூத், மன்னார் மாவட்ட எம். பியாக இருக்கும் நாகூர் அயூப் ஆகியோர் நிபந்தனையற்ற விதத்தில் வடக்கு - கிழக்கு இணைக்கப்படவேண்டும் என்று ஈரோஸ் தெரிவித்திருக்கும் யோசனைகளை எதிர்க்கப்போவதாக கூறியிருப்பதுடன் தேவைப்படின் கட்சியிலிருந்து வெளியேறப் போவதாகவும் தெரிவித்துள்ளனர் என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

## ஊவா தோட்ட தொழிலாளர் வேலை நாள் திடீர்குறைப்பு

ஊவா பகுதி தோட்டங்களில் வேலை நாட்கள் திடீரென குறைக்கப்பட்டுள்ளன. இந்த நாட்குறைப்பிற்கான காரணம் இதுவரை புரியவில்லை என விவசாய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் ஆர். எம். கிருஷ்ணசாமி தெரிவித்துள்ளார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில், தேயிலை தோட்டங்களில் போதியளவில் வேலை இல்லாததினாலேயே வேலை நாள் குறைப்புச் செய்துள்ளதாக தோட்ட நிர்வாகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் ஜனவரி மாதத்தில் இருந்து கூடுதலாக கொழுந்து பறிக்கப்படும் காலமாகையால் இம்மாதத்தைத் தொடர்ந்து கூடுதலான வேலை வழங்கப்பட்டு வருவதே வழக்கம். [illegible] எவ்வாறாயினும் தொழிலாளர்கள் வேலை நாட்களை இழப்பதுடன் வாட்டக் காலங்களிலும் வேலை நாட்களை இழந்துள்ள தொழிலாளர்கள் [illegible] ரீதியிலும் பெரும் நட்டத்தை அடைய வேண்டிவரும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## மேசன் தொழிலாளர்க்கு புதிய தொழிற்சங்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பரந்துகிடக்கும் மேசன் வேலை செய்யும் சகல தொழிலாளர்களையும் ஒன்று திரட்டி ஒரு அணியின் கீழ் ஒரு அமைப்பாக செயல்பட வைக்கவும், தொழில் இழந்து பட்டினி நிலையில் இருக்கும் தொழிலாளருக்கு உதவும் முகமாகவும், ஒரு புதிய தொழிற்சங்கமென்று ஆரம்பிக்கப்படவுள்ளது. இதற்கான ஆரம்பக் கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை ஒன்பது மணிக்கு யாழ். இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் கலந்து கொள்ளுமாறு சகல மேசன்மார், உதவியாளர்கள், மெயின்ரர்கள் அனைவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## பரு. இறங்குதுறையை திருத்தியமைக்க அனுமதி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை துறைமுக இறங்குதுறையை முழுமையாக திருத்தி அமைப்பதற்கு சிறிலங்கா கூட்டுப்படைகளின் தலைமை அலுவலகம் அனுமதி வழங்கி உள்ளது.

இத்துறைமுகத்தின் ஒரு பகுதியை மட்டுமே திருத்தி அமைப்பதற்கு முன்னர் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. முழுமையான திருத்த வேலைகள் நிறைவு பெறும் பட்சத்தில் ஒரே நேரத்தில் இரு கப்பல்களைக் கையாளக் கூடியதாக இருக்கும் என்று தெரிவிக்கப்படுகிறது. (க)

## புங்குடுதீவு மாணவர்களின் வகுப்புக்கள் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் செயற்பட்டு வந்த புங்குடுதீவு சிறீ சித்தி விநாயகர் மகாவித்தியாலயமும், புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலயமும், ஆனைப்பந்தி உயர்கல்லூரியில் (தனியார் கல்வி நிறுவனம்) காலை நேர வகுப்புகளாக நடைபெற்று வருகின்றது. இருபாடசாலைகளில் பயின்று வந்த ஆண்டு ஆறு தொடக்கம் ஆண்டு பதினொன்று (11) வரையுமுள்ள மாணவர்களும், கல்வியைத் தொடர முன்வருவோரும், ஏனைய தீவுப் பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்த மாணவர்களும் அனுமதிக்கப் படுவார்கள் என்றும் இவ் வித்தியாலய அதிபர்கள் தெரிவித்துள்ளனர்.

# இனப்பிரச்சினைத் தீர்விற்கு இனவாதம் தடையாயுள்ளது

## -அமெ. தமிழ் அறிஞர்கள் கண்டனம்

[வாஷிங்டன்]

சிங்களப் பேரினவாதம் மறுபடியும் தலைதூக்கியிருப்பது இனப்பிரச்சினைக்கு இணக்கமான தீர்வொன்றைக் காண்பதற்குத் தடையாக இருக்கிறது என்று அமெரிக்காவிலுள்ள தமிழ் அறிஞர்கள் சிலர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் வெளியிட்ட கூட்டறிக்கையொன்றில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: இனப் பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு காணப்படமுடியாது என்பதை ஏற்று இணக்கமான தீர்வொன்றைக் காண சம்பந்தப்பட்டவர்கள் தம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும்.

பல்லாண்டுகளாக இனவாத ஆட்சிகளால் அடக்கபபட்டும், மிருகத்தனமான கொலை வெறிக்கு பலியாகியும், சிறிலங்கா இராணுவத்தின் சித்திரவதை மற்றும் சிறைப்படுத்தல் கொடுமைக்கும் தமிழர்கள் உள்ளாகி வருகின்றனர் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் போதுமான உணவுப் பொருள் மருந்துப் பொருள்கள் மற்றும் மின்சாரம், போக்குவரத்து போன்ற அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் பெரும் கஷ்டத்திற்கு உள்ளாகியுள்ளனர். தமிழர்களின் மொத்தச் சனத்தொகையுமே யுத்தத்தில் பாதிக்கப்பட்டு உள்ளது. எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் வடக்கு, கிழக்குப் பகுதிகளுக்கு உணவு, மருந்துப் பொருள்கள், எரிபொருள்கள் என்பன அனுப்படவேண்டும் என்றும் அரசாங்கம் இனப் பிரச்சினைத் தீர்வுக்கு ஐக்கியநாடுகள் சபையின் மத்தியஸ்துவத்தை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## சிந்தனைக்கு

அச்சத்தை அடிப்படையாகக் கொண்ட சமாதானம், அடக்கிவைக்கப்பட்ட போர்அன்றி வேறில்லை.

-ஹென்றிவேள்டைக்

ஈழநாதம்

31, மகேந்திராவீதி, யாழ்ப்பாணம் 08-02-1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 05

# பிரதமர் டிங்கிரியின் பழைய பல்லவி

அமைச்சர் தொண்டமான் அல்ல, எவர் கூறினாலும், புலிகள் ஆயுதங்களைக் கையளிக்கும் வரை யுத்தம் தொடரும் என சிறிலங்காவின் பிரதமமந்திரியும், பாதுகாப்பு இணை அமைச்சருமான டி. பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்று காணப்பட வேண்டும் என உள்நாட்டு, வெளிநாட்டு மனிதநேய அமைப்புக்கள் பலவும் மேற்குலக நாடுகளும் வற்புறுத்தி வருகின்றன. மேலும் இராணுவ நடவடிக்கையின் மூலம், இனப்பிரச்சினைக்குத் தீர்வுகளை எட்டிவிட முடியாது எனவும் அவை தெரிவித்துள்ளன. அத்தோடு சிறிலங்கா அரசாங்கத்தின் மனித உரிமை மீறல்களையும் அவை கண்டித்துள்ளன.

உலகநாடுகள் அநேகமாக இன்று ஆயுத மோதல்களைத் தவிர்த்துக்கொள்ளவேவிரும்புகின்றன. உலகில் பலம் மிக்க இராணுவங்களில் ஒன்றைக் கொண்டிருந்த முன்னாள் சோவியத்யூனியன் தேசிய இனங்கள் பிரிந்து செல்ல முற்பட்டபோது அவற்றிற்கு எதிராக இராணுவ அடக்கு முறைகளைக் கட்டவிழ்த்து விடாமல் அவற்றின் சுதந்திரத்தை அங்கீகரித்தது. சோவியத் யூனியனில் இருந்த நிலை இராணுவத்தின் மூலம் பிரச்சினைகளைக் கட்டுப்பண்ண முடியாமல் போயிருக்கலாம் எனக் கருத இடமுண்டாயினும். இராணுவத்தின் மூலம் பிரச்சினையை அடக்க முற்படவில்லை என்பதைக் கருத்திற் கொள்ளாமல் இருப்பதற்கில்லை. அத்தோடு, சிறிலங்கா போன்று, ஓர் இராணுவத் தளபாடப் பற்றாக் குறையோ, அன்றி இறக்குமதி செய்ய வேண்டிய தேவையோ இன்றி சோவியத் இராணுவம் முழுமை பெற்ற அமைப்பாக இருந்தது என்பதும் மறுப்பதற்கில்லை.

இதேவேளை, யூக்கோசெலவேக்கியாவில் எழுந்த தேசிய விடுதலைப் போராட்டங்களை அரசு சேபியர்களை அதிகமாகக் கொண்ட இராணுவத்தின் மூலம் அடக்க முற்பட்டது. ஆனால், யூக்கோசெலவோக்கியாவின் இராணுவ நடவடிக்கைகளை மேற்கு நாடுகள், குறிப்பாக ஐரோப்பிய பொருளாதார சமூகநாடுகள் கண்டித்தன. ஆனால், யூக்கோசெலவோக்கியா போரைத் தொடர்ந்தது. இதன் விளைவு ஐரோப்பிய பொருளாதார சமூக நாடுகள், குரோசியா, ஸ்லேவேனியா ஆகிய இருகுடியரசுகளையும்சுதந்திரநாடுகளாக அங்கீகரித்துள்ளதோடு, ஐ. நாவின் சமாதானப்படை ஒன்றையும், யூக்கோசெலவோக்கியாவிற்கு அனுப்ப முயற்சித்து வருகின்றது.

ஆனால், சிறிலங்கா அரசாங்கமோ உலகநிகழ்வுகள் யாவற்றையும் புறந்தள்ளியுள்ளது பேச்சளவில் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுஎனக்கூறிக்கொண்டாலும் அதற்கான நடவடிக்கை எதிலும், அக்கறை காட்டுவதாக இல்லை. பேச்சளவில், இனப்பிரச்சினையைத்தீர்ப்பதற்கு பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமித்துள்ள அரசாங்கம், அக்குழுவிற்கு தீர்வுத்திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்கத்தேவைஇல்லைஎனத்தெரிவித்துள்ளது. இனப்பிரச்சினைத் தீர்விற்கு கருத்தொருமித்த தீர்வு ஒன்றை கண்டறியவே பாராளுமன்றத் தெரிவுக்குழு நியமிக்கப்பட்டதாகத் தெரிவிக்கும் அரசாங்கம் ஐ தே. கட்சியின் திட்டம் இல்லாமல் எவ்வாறு கருத்தொருமைப்பாடு ஏற்பட்டுவிடும் எனக்கருதுகிறது? இதிலிருந்து பாராளுமன்றத் தெரிவுக்குழுவின் நோக்கமே அர்த்தமற்றதாகி விடுகின்றது என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை.

இந் நிலையில், பிரதமமந்திரி டி.பி. விஜயதுங்காவின் அறிவிப்பானது பௌத்த பேரினவாதத்தின் உண்மைச் சொரூபத்தைக் காட்டுவதானதாகும். அதாவது சிறிலங்கா அரசாங்கம் இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வைத்தவிர வேறு எதைப்பற்றியும் சிந்திக்கத்தயாராக இருப்பதாக தெரியவில்லை என்பதாகும். ஆகையினால், சிறிலங்காவின் இராணுவ நோக்கு வெற்றிபெற்றுவிட முடியாது என்பதை உணர்த்தும் வரை தமிழர் போராடியே ஆகவேண்டும்.

## துணைப்படை வீரர் யானை தாக்கி மரணம்

(வவுனியா)

விடுதலைப் புலிகளின் துணைப்படை வீரர் ஒருவர் யானை தாக்கி மரணமானார்.

கடந்த 29 ஆம் திகதி தந்திரிமலை காட்டுப் பகுதியில் நடந்து சென்றுகொண்டிருந்தசமயம், திடீரென்றுபக்கத்தில் வந்த யானை தும்பிக்கையால் அவரைத் தாக்கியது

இரத்த வெள்ளத்தில் கிடந்த அந்த வீரர் உடனடிச் சிகிச்சைக்கு அனுப்பப்பட்ட போதிலும் மறுநாள் 30 ஆம் திகதி மரணமானார்.

செட்டிகுளம் கல்லாறு பகுதியைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவரே யானையின் தாக்குதலுக்கு உள்ளானவர் என்று தெரிவிக்கப்பட்டது. (தி)

## ஆறுமாத கடன் இடைநிறுத்தம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு வருட சம்பள முற்பணம் மற்றும் ஆறுமாத கடன் ஆகியவை மாகாண சபையினால் மறு அறிவித்தல் வரை இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது

இதையடுத்து கடனுக்காக ஏற்கனவே விண்ணப்பித்திருந்த முந்நூறுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்நடவடிக்கையை இட்டு அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

இதில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது விடயத்தில் உடன் நடவடிக்கையை மேற்கொண்டு வழமைபோல் ஆசிரியர்களுக்கான கடன்களை வழங்க வேண்டுமென அதிபர்களூடாக ஆசிரியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காயமடைந்த

யில் கடந்த செவ்வாயன்று இரவு பதினொரு மணியளவில் இராணுவச் சீருடை அணிந்த பத்துப்பேர் காவல் நிலை ஒன்றின் மீது தாக்குதல் நடத்தினர் எனவும், அச்சமயம் றிசேர்வ் பொலிசார் உட்பட இருபத்தைந்து பேர் காவல் நிலையில் இருந்தனர் எனவும் அறிய முடிகின்றது.

அரசிற்கு

தொடர்ந்து மேற்கொள்ளப் படவிருக்கிறது.

அதேவேளை அரச திணைக்களங்களுக்கு மாதாந்தம்வழங்கப்படும் கட்டுநிதி தேவைக்கேற்ப வழங்கப்படுவதில்லை. இலங்கையின் சகல மாவட்டங்களுக்குமான கட்டுநிதியில் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கிறது. கடந்த வருடம் டிசம்பர் மாதம் யாழ். மாவட்டத்திற்குச் சுமார் 152 மில்லியன் ரூபா கட்டுநிதி தேவைப்பட்டது. ஆனால் இங்கு 60 5 மில்லியன் ரூபாமட்டுமே அனுப்பி வைக்கப்பட்டது.

அதேபோல் இவ்வருடம்ஜனவரி மாதம் கட்டுநிதியாக 59 மில்லியன் ரூபா தேவைப்பட்டது. ஆனால் 27 மில்லியன் ரூபா மட்டுமே இங்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது.

திறைசேரியில் போதியஅளவு பணம் இன்மையே இதற்குக் காரணம் என்று கொழும்பில் இருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

## இல. திரும்பிய அகதிகள் வவுனியாவில் அவதி

(வவுனியா]

வவுனியா புகையிரத நிலையத்திற்கு அருகில் பயணிகள் தங்கு விடுதியில் இந்தியாவில் இருந்து வந்த இரண்டாவது தொகுதி அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்

இந்த அகதிகள் போதிய வசதிகள் இன்றி அல்லல்படுவதாக தெரியவருகிறது குழந்தைகளுக்கு பால்மா கரைப்பதற்கு கூட சுடுநீர் வழங்கப்படுவதில்லை என்றும் ஏனையோருக்கு தேநீரோ ஏனைய வைத்திய வசதிகளோ இல்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்களின்இந்தமுறைப்பாடு தொடர்பாக குறித்த அதிகாரிகளிடம் வினவியபோது ஒருவருக்கு 15ரூபா பெறுமதியான உணவு வழங்கவே அனுமதிக்கப்பட்டுள்ளது என்றும் இதனால் தேநீரோ, சுடுநீரோ அகதிகளுக்கு வழங்கமுடியாதிருக்கிறது எனக் கூறினார்.

மேலும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அகதி ஒருவர் கருத்து தெரிவிக்கையில் தமக்கு வவுனியா போய்ச் சேர்ந்ததும் யாழ்ப்பாணம் முல்லைத்தீவு போன்ற இடங்களுக்கு செல்வதற்கு வாகன வசதி செய்து தரப்படும் என திருமலையில் வைத்து அதிகாரிகள் தெரிவித்ததாகவும் ஆனால் வவுனியாவில் அதுபற்றி கேட்டபோது அவ்வாறான உத்தரவு எதுவும் தமக்கு வழங்கப்படவில்லை என அவ் அதிகாரிகள் தெரிவிக்கின்றனர் எனவும அவ் அகதி தெரிவித்தார்.

இதனால் சொந்த இடங்களுக்கு கூட திரும்பிச்செல்ல முடியாத அவல நிலையில் அகதிகள் இருக்கின்றனர்.

## 560 பதவி உயர்வில் ஒருவர் மட்டுமே தமிழர்

பொலிஸ் கான்ஸ்டபிள்களாக பணிபுரிந்த 560 பேர் சார்ஜண்டுகளாக பதவி உயர்வு பெற்றுள்ளனர் இவர்களில் ஒருவர் மட்டுமே தமிழர் என பொலிஸ் தலைமைக்காரியாலய வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் கந்தசாமிவாமதேவன் என்ற பிரஸ்தாப தமிழ் கான்ஸ்டபிளேஒரு தமிழ் சார்ஜண்டாகும்.

எதிர்கால வேலைவாய்ப்புகளில் இனவிகிதாசாரம் கடுமையாகக் கடைப் பிடிக்கப் பட்டு அதற்கமைய வேலைவாய்ப்பு வழங்கப்படும் என கூறும்அரசு நடைமுறையில் அது வெறும் கண் துடைப்பு நடவடிக்கையாக இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரணவில 'வொய்ஸ் ஒப்அமெரிக்க நிலையம்'

## சிலுவையில் அறையவும் மக்கள் தயாராய் உள்ளனர்

(கொழும்பு)

கத்தோலிக்க கிராமமான இரணவிலவில் வொயிஸ் ஒப் அமெரிக்கா அஞ்சல் நிலையம், உல்லாசப் பயண ஹோட்டல் ஆகியவற்றிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அக் கிராம மக்கள் முதல் கட்டமாக தென்னை மரங்களில் வெள்ளை நிற சிலுவைகளை அறைந்து வருகிறார்கள். இந்த எதிர்பபுக்கு செவிசாய்க்க அரசு தவறுமானால் சிலுவை மரத்தில் வைத்து தம்மை அறைய ஆயத்தமாக இருப்பதாக கிராமத்தின் உள்ளூர் தலைவர்களில் ஒருவரான ஹென்றி ஆர்தர் தெரிவித்தார்.

## மட்டுப் படுத்தப்பட்ட ரீதியில் பிறப்பு சான்று விநியோகம்

(யாழ்ப்பாணம்)

அத்தியாவசிய அவசர தேவைகளுக்காக பிறப்பு அத்தாட்சிப்பத்திரம் பெறுவதற்கு விண்ணப்பித்தவர்களுக்கு மட்டும் மேற்படி விண்ணப்பங்களை வழங்குவதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்திருக்கிறது.

இவ்வாறு விண்ணப்பித்தவர்கள் செயலக மேலதிகப்பதிவாளர் அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படியும் இவர்களுக்கு போட்டோ பிரதிஎடுக்கபபட்ட படிவங்களில் மேற்படி சான்றிதழ் வழங்கப்பட இருக்கிறது. இதனால் மேலதிக கட்டணமாக பிரதி ஒன்றுக்கு 11 ரூபா கட்டணமாகச் செலுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. (க)

# அரசிற்குபாரிய நிதிநெருக்கடி; கட்டுநிதிகளில்பெரும்வெட்டு

(கொழும்பு)

சிறிலங்கா அரசுக்கு என்றும் இல்லாதவாறு நிதி நெருக்கடி தோன்றியுள்ளது. இதனால் புதிதாக எந்த அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பிக்க வேண்டாம் என்று அறிவிக்கப்பட்டிருப்பதுடன் அரசதிணைக்களங்களுக்கான கட்டு நிதியிலும் பெருமளவு குறைக்கப்பட்டிருக்கின்றது.

கடந்தவருடம் இறுதிப்பகுதியில் இருந்து நிதி நெருக்கடி மோசமடைந்து வருகின்றது. இதனால் பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின்கீழ் ஒதுக்கீடுசெய்யப்பட்ட நிதியைப் பயன்படுத்திப் புதிதாக எந்தவொரு அபிவிருத்தித் திட்டங்களையும் ஆரம்பிக்கவேண்டாம் என்று கொள்கைத்திட்டமிடல் அமுலாக்கல் அமைச்சினால் சகல மாவட்ட அமைச்சர்களுக்கும் அரசாங்க அதிபர்களுக்கும் சுற்றுநிருபம் ஒன்று அனுப்பிவைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட சகல அபிவருத்தித் திட்டங்களும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## மனித உரிமை மீறல்; படையினருக்கு கட்டாய லீவு

(கொழும்பு)

மனித உரிமை மீறல்களில் ஈடுபட்ட பொலிசார் மற்றும், பாதுகாப்புப் படையினருக்கு கட்டாய ஓய்வு வழங்க சிறிலங்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது என்று இந்திய வானொலி தெரிவித்தது. சிறிலங்கா அரசின் வெளியுறவு அமைச்சு அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி இதனைத் தெரிவித்த இந்திய வானொலி மேலும் கூறுகையில்ஊர்காவற் படையினர், துணைப்படையினர், பொலிசார், மற்றும் பாதுகாப்புப் படையினருக்கு மனித உரிமைகளைப் பேணுமாறு கண்டிப்பான உத்தரவுகளைச் சிறிலங்கா அரசு பிறப்பித்திருப்பதாகவும் கூறியது.

## தம்மை ஆளும் உரிமை மாகாணசபைக்கு வேண்டும்

### அதிமேற்றிராணியார் மார்க்கஸ் பெர்னான்டோ

தம்மைத்தாமே ஆளும் உரிமை மாகாண சபைகளுக்கு இருக்க வேண்டுமென கத்தோலிக்க பீடத்தின் அதிமேற்றிராணியார் அதி வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னான்டோ கூறியுள்ளார். அவர் மேலும் சுதந்திர தினத்தில் அர்த்தமுள்ள செய்தியை விடுக்க விரும்பும் எவரும் வடக்கு கிழக்கு பிரச்சினையையும், நாட்டின் யுத்த நிலைமையையும் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது எனவும் தெரிவித்துள்ளார்.

## கடற் படையின் சடலம் கரை ஒதுங்கியது

(யாழ்ப்பாணம்)

பூநகரி கடற் பகுதியிலுள்ள சூரமனை கடற்கரையில் கடந்த புதன்கிழமை சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த ஒருவரின் சடலம் கரை ஒதுங்கியுள்ளது.

இது கடந்த செவ்வாயன்று ஆனையிறவிற்கு அண்மையில் புலிகளால் மூழ்கடிக்கப்பட்ட படகிலிருந்த கடற்படையினரில் ஒருவரின் சடலமாக இருக்லாம் என நம்பப்படுகிறது.

## இனங்களுக்குள் குரோதம்; கட்சிகளே வளர்த்தன

### - உபவேந்தர் பீரிஸ்

[கொழும்பு]

கடந்த நாற்பத்துநான்கு வருடங்களாக அரசியல் கட்சிகள் இனங்களுக்கு இடையே குரோதத்தை வளர்க்கும் செயல்களிலேயே ஈடுபட்டு வந்துள்ளன என்று கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் ஈ. எல். பீரிஸ் கூறியுள்ளார். அவர் மேலும் கூறுகையில் அவற்றைத் தீர்த்துவைப்பதற்கு உதவும் முகமாக எமது கட்சி முறை மாற்றியமைக்கப்படவேண்டும் எனவும், இதுவே இன்று எமது நாட்டின் முக்கிய பொதுத் தேவையாக உள்ளது எனவும் குறிப்பிட்டார்.

### பிரதமர்

பி. வி. நரசிம்மராவ் மத்திய அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் பற்றி எடுத்துக் கூறியுள்ளார். பிரதமருடன் மத்திய அமைச்சர்களான சரத்பவார், எஸ். பி. சவான், சங்சரானந், குமாரமங்கலம் மற்றும் கசிஷ்மீர் மாநில ஆளுநர் உட்படப்பலர்இம் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

### கரடியனாற்றில்

இதேவேளை கரடியனாற்றில் புலிகள் கடும் எதிர்த்தாக்குதல் நடத்துவதை அடுத்து சிறிலங்கா விமானப்படை விமானங்கள் அப்பகுதியில் அகோர குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

### வீரச்சாவு

சில்வஸ்ரர் (தர்மலிங்கம் கண்ணன், பூவரசங்குளம், ஓமந்தை) 06-02-92 இல வீரச்சாவடைந்தார். இவருக்குத் தமிழீழ விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

### அணுவாயுதம்

அமெரிக்கா பல தடவை கூறிய போதும், பாகிஸ்தான் மறுத்து வந்துள்ளமை தெரிந்ததே.

பாகிஸ்தானின் உயர்மட்ட அதிகாரியொருவர் அந்நாட்டின் அணு ஆயுத வலிமை பற்றி உத்தியோகபூர்வமாகக் குறிப்பிட்டமை இதுவே முதற் தடவையாகும்.

இதேவேளைபாகிஸ்தான்அணுவாயுத தயாரிப்புதிட்டங்களை தொடர்வது ஏற்கப்படக் கூடியதல்ல எனவும், அவற்றை அந்நாடு கைவிட வேண்டும் எனவும் அமெரிக்கா கோரியுள்ளது. தற்போது அமெரிக்க விஜயமொன்றை மேற்கொண்டிருக்கும் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் ஷரியத்கான் அமெரிக்க அதிகாரியான ஸ்டிபன் சொலார்ஸ் உடன் பேச்சுக்கள் நடத்தியுள்ளார்.

உ

சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

ஸ்வஸ்தி ஸ்ரீ நிசழும் பிரசோற்பத்தி வருஷம் தை மாதம் 26ஆம் நாள் (09-02-1992) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும், அமிர்த சித்தயோகமும் கூடிய சுபதினத்தில், முற்பகல் 08.43மணிமுதல் 10.14மணிவரை வரும் மீனலக்கின சுபமுகூர்த்தத்தில்

எங்கள் ஜேஷ்ட புத்திரன்
சிரஞ்சீவி
**கிருஷ்ணசுவாமிசர்மா**
அவர்களுக்கும்

எங்கள் கனிஷ்ட புத்திரி
சௌபாக்கியவதி
**கிருத்திகா**
அவர்களுக்கும்

வேழமுகத்து விநாயகன் திருவருளால் புன்னாலைக்கட்டுவன், ஆயாக்கடவை விநாயகர் ஆலயத்தில் திருமாங்கலயதாரண பாணிக்கிரகணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் குடுப்ப சமேதரராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்,

சமாவர்த்தனம் — 09-02-1992 காலை 5.00 மணிக்கும்,
வரவேற்புபசாரம் — 09-02-1992 பிற்பகல் 4 00மணிக்கும்,
மணமகன் இல்லத்தில் நடைபெறும்.

உற்றார், உறவினர், ஊர்மக்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை விரும்பும்

சிவஸ்ரீ
கு. சிதம்பரேஸ்வரசர்மா தம்பதிகள்
அச்செழு, நீர்வேலி.

பிரம்மஸ்ரீ
சோ. பாலகிருஷ்ணசர்மா தம்பதிகள்
புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(2197)

### அத்தனகல இரட்டைக் கொலை;

## இன்டபோல் உதவியை சிறிலங்கா நாடுகிறது

(கொழும்பு)

அத்தனகல நீதிமன்ற வளவினுள் கொலைசெய்யப்பட்ட இன்ஸ்பெக்டர் பிரசன்னா தம்மிக்கா சந்திரசேனா(32வயது), அவரது மாமனார் மைக்கல் போல்விஜேயசேகரா ஆகியோரைக் கொலை செய்த சந்தேக நபர் ஒருவர் வெளிநாடு சென்றுள்ளார் என்றும், அவரைப் பிடிப்பதற்குப் பொலிஸார் சர்வதேசப் பொலிஸாரின் உதவியைக் கோரவுள்ளனர் எனவும் கம்பஹா பொலிஸ் நிலையக் குற்றப் பிரிவு இன்ஸ்பெக்டர் நோட்டன் டீ சில்வா தெரிவித்துள்ளார்.

இந்த இரட்டைக் கொலை சம்பந்தமாகத் தேடப்பட்டு வரும் பிரதான சந்தேகநபரும், பெண் ஒருவரும் இன்னமும் அகப்படாமல் இருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## செஞ்சிலுவைச் சங்கம்முன் தொண்டர்கள் மறியல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஊழல்களைக் கண்டித்தும் தன்னிச்சையான போக்கை எதிர்த்தும் செஞ்சிலுவைச் சங்க தொண்டர்கள் பதினொரு அம்சக் கோரிக்கைகளை முன் வைத்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும்மறியல் போராட்டத்தையும் நடத்தினர்.

நேற்றுக்காலை ஒன்பது மணியளவில் யாழ். போதனா வைத்தியசாலைமுன்பாகஆரம்பித்த இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் சங்கத்திற்கு எதிரான பல சுலோகங்களை ஏந்தியவாறு சென்று செஞ்சிலுவைச்சங்கயாழ். கிளையை அடைந்தது.

மேற்படி அலுவலகத்தின் முன்பாக ஐம்பதிற்கும் மேற்பட்ட தொண்டர்களும்பொது மக்களும் மறியல் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இவ்வேளை அலுவலகத்துக்கு வந்த கிளைச்செயலாளர் சிவானந்தராசாவை உட்புகவிடாது தொண்டர்கள் தடுத்து நிறுத்தினர். தொடர்ந்து வேறோர் பாதையால் உட்புக முற்பட்டபோது தடுத்த தொண்டர் ஒருவரைத் தள்ளிவிட்டுச் செயலாளர் உட்புகுந்தார். இவ்வேளை அங்கு குழுமி நின்ற தொண்டர்கள் ''சிவானந்தராஜா ஒழிக, செஞ்சிலுவைச் சங்கமா செயலாளர் சங்கமா, தனிமனித ஆதிக்கத்தைநிலைநாட்டாதே சங்கம் என்ன உன் சொந்த வீடா, ஊரார் பணத்தில் உல்லாசமா போன்ற பல ஆக்ரோஷமான கோஷங்களை எழுப்பினர். தொண்டர்களின் ஆர்ப்பாட்டத்தைத் தொடர்ந்து செயலாளர் வாகனத்தில் ஏறி காவல்துறை பணிமனைக்குச் சென்று முறையிட்டதைத் தொடர்ந்து ஸ்தலத்திற்கு விரைந்த காவல் துறையினர் இவர்களைக் கலைந்து செல்லுமாறு பணித்தனர்.

இதைத்தொடர்ந்து தொண்டர்கள்பதினொரு கோரிக்கைகள் அடங்கிய மகஜரை இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் நிர்வாக உத்தியோகத்தர் சிதம்பரப்பிள்ளையிடமும் தமிழீழ காவல்துறையினரிடமும் கையளித்த பின்அங்கிருந்துகலைந்து சென்றனர். (ச, க, 75)

## கிராம சேவகர் வெற்றிடம் நிரப்ப நடவடிக்கை

யாழ். மாவட்டத்தில்வெற்றிடமாக உள்ள கிராம சேவகர் பதவிகளைநிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் மார்ச்மாதம் நடாத்தப்பட இருப்பதாக தெரியவருகிறது. போட்டிப்பரீட்சையைத் தொடர்ந்து 108 வெற்றிடங்களிற்கு கிராம சேவை அலுவலர்கள் நியமிக்கப்பட இருக்கின்றனர். (க)

### மீண்டும்

பங்களா தேசின் தலைநகரம் டாக்காவில் நடாத்தப் படவேண்டும். என தீர்மானிக்கப் பட்டது தெரிந்ததே.

### இந்தியாவிலிருந்து

வைத்துள்ளது. இத்துடன் இந்த எல்லையில் மூன்றே கால் லட்சம் பாகிஸ்தான் துருப்புக்கள் குவிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது

### பாகிஸ்தானின்

கிக் கூறினார்.

பாகிஸ்தானில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற வேலைநிறுத்தம், மற்றும் ஜே. கோ. எல். எப் அமைப்பின் அறிவிப்பு என்பன தொடர்பாக எழுந்துள்ள நிலைமைகள் பற்றி அவர் இந்த நாடுகளின் தூதுவர்களுக்கு எடுத்து விளக்கியதாகவும் சொல்லப்படுகிறது.

இதனிடையே ஜம்மு காஷ்மீர் மாநில நிலை தொடர்பாகவும், எல்லைப் பகுதியில் அதிகரித்துள்ள பதற்றம் தொடர்பாகவும், மத்திய அரசின் அரசியல் நிர்வாகக்குழு நேற்று முன்தினம் இரவு அவசரக் கூட்டமொன்றைப் புதுடில்லியில் நடத்தியுள்ளது. எனினும் அதில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

### பராமரிக்க மறுப்பு

தமிழ்நாட்டிலிருந்து மன்னாருக்கு வர இருக்கும் அகதிகளை அங்குள்ள முகாம்களில் வைத்து தம்மால் பராமரிக்க முடியாது என ஐ நா. அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது. அவர்களை தாம் பொறுப்பேற்கப் போவதில்லை எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### பாக்

றன்று கூடவிருக்கிறது.

இதேவேளை வாஷிங்டனில் பாகிஸ்தான் வெளியுறவுச் செயலாளர் செக்றியகானைச் சந்தித்த அமெரிக்க செனேற் உறுப்பினர் ஸ்ரீபன் சொலாயஸ் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு பாகிஸ்தான் வழங்கி வரும் ஆதரவு குறித்துக் கவலை தெரிவித்துள்ளார்.

### பாக். கடும்

பாகிஸ்தானின் பொறுப்பு என்றும் அவர் தெரிவித்தார்.

பாகிஸ்தான் இதைச் செய்யத் தவறினால் இந்திய பாதுகாப்பு படை இதைச் செய்யும் என்று அவர் கூறினார்.

இதே வேளை நிர்ணயிக்கப்பட்ட எல்லைக் கோட்டைத் தாண்டி உள்ளே நுழையும் எவரும் தடுத்து நிறுத்தப்படுவார்கள் இந்திய மத்திய உள்துறை இணை அமைச்சர் எம். எம். ஜேக்கப் செய்தியாளர்களிடம் பேசுகையில் தெரிவித்தார்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது